தொழுநோய் ஒழிப்பு தினம் 2025

ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு உறுதிமொழி - தொழுநோய் கண்டறிதல் முகாம் !

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன. 31 – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (30.11.2025) சென்னை, கிண்டி, செல்லம்மாள் மகளிர் கல்லூரியில், தொழுநோய் ஒழிப்பு தினம் 2025 முன்னிட்டு, ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது. பின் தொழுநோய் கண்டறிதல் முகாமினை தொடங்கி வைத்து, தொழுநோய் விழிப்புணர்வு குறும்படத்தை வெளியிட்டு, தொழுநோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, தொழுநோய் விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி விழா பேசினார்.

அவர் பேசியது வருமாறு:

ஒவ்வொரு வருடமும் மகாத்மா காந்தியடிகளின் நினைவு நாளான ஜனவரி 30 அன்று தொழுநோய் ஒழிப்பு தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மைக்கோ பாக்டீரியம் லெப்ரே என்ற பாக்டீரியா கிருமியினால் தொழுநோய் ஏற்படுகிறது. தோல் மற்றும் நரம்புகளை பாதிக்கிறது. ஆரம்ப நிலையில் சிகிச்சையளித்தால் அங்க குறைபாட்டை தடுக்கலாம். தொழுநோய் பாதிப்பு இல்லாத குழந்தைகள் என்ற நிலையை ஏற்படுத்துதல், தொழு நோயால் ஏற்படும் அங்க குறைபாட்டை தடுத்தல், தொழுநோய் பரவாமல் தடுத்தல் ஆகியவை இலக்கா க நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை அன்றே கணித்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், செங்கல்பட்டு மாவட்டம் பரனூரில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கான மறு வாழ்வு இல்லத்தை 02.10.1971 அன்று திறந்து வைத்தார்கள். இன்று வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த இல்லத்தில் சுமார் 80 முதல் 100 பேர் வரை தங்கியுள்ளனர். அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களும் 26.04.2023 அன்று பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்திற்கு சென்று அங்குள்ளவர்களுக்கு உதவிகளை வழங்கி, "தலைவர் கலைஞர் அவர்களின் 48வது பிறந்த நாள் விழாவின் போது பொதுமக்கள் மனமுவந்து அளித்த நிதியில் இருந்து கட்டப்பட்ட இந்த இல்லமானது விளிம்பு நிலை மக்களின் மீதும் அவர் கொண்டிருந்த அன்பின் வரலாற்றுச் சான்று!" என பதிவு செய்துள்ளார்கள்.

தொழுநோய் மருத்துவ முகாம்!

நேற்று முதல் (30.01.2025 முதல் 15.02.2025 வரை 15 நாட்கள்) தொழுநோய் சிறப்பு விழிப்புணர்வு முகாம் மூலம் குடிசை வாழ் மக்கள், தொழிலாளர்கள், பள்ளி குழந்தைகள் ஆகிய அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, தொழுநோய் கண்டறிதல் முகாம்கள் நடத்துவதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் தொழுநோயால் குழந்தை பாதிப்பு, அங்க குறைபாடு மற்றும் தொழுநோய் பாதிப்பு அதிகம் உள்ள 133 வட்டாரங்களில், 27 நகரப்பகுதிகளில், 50,76,701 வீடுகளில், 2,01,08,585 மக்களுக்கு தொழுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளும் வகையில் தொழுநோய் கண்டுபிடிப்பு முகாம் 13.02.2025 முதல் 28.02.2025 வரை 15 நாட்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஆண்களை ஆண் பரிசோதகர்களும், பெண்களை பெண் பரிசோதகர்களும் வீடு வீடாக சென்று பரிசோதிக்க உள்ளனர். கடந்த வருடம் நடத்தப்பட்ட முகாமில் 320 புதிய தொழுநோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

தொழுநோயாளர்களுக்கு உதவித் தொகை உயர்த்தப்பட்டது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 40% மேல் அங்க குறைபாடு உள்ள தொழுநோயாளிகளுக்கு மாத உதவித் தொகையை 15.03.2022 அன்று ரூ.1000லிருந்து ரூ.2000 ஆக உயர்த்தி அறிவித்தார்கள். அதன்படி கடந்தாண்டில் மட்டும் ரூ.28.08 கோடி செலவில் 11,702 நபர்களுக்கு மாத மாதம் அவர்களின் வங்கி கணக்கில் ரூ.2000 வரவு வைக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு ரூ.3.83 இலட்சம் செலவில் 15,759 சுய பாதுகாப்பு பெட்டகங்களும், ரூ.38 இலட்சம் செலவில் 9,462 MCR காலணிகள் மற்றும் 44,661 நபர்களுக்கு ஒரு ரிபார்ம்பிசின் மாத்திரைகளும், ரூ.11.76 இலட்சம் செலவில் 98 மறு சீரமைப்பு அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 10 தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களில் 1001 பேர் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். 6 அரசு தொழுநோய் மருத்துவமனைகளில் வெளிநோயாளிகளுக்கு சிகிச்சைகளும் கூட்டு மருத்துவ சிகிச்சைகளும் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் மிகப் பெரிய அளவில் மருத்துவக்கட்டமைப்புகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மாதம் நான் உத்தரப்பிரதேசம் மாநிலம் சென்றிருந்தேன். குறிப்பாக ஆக்ரா பகுதியில் தொழுநோய் ஆராய்ச்சி மையம் ஒன்று இருந்தது. அங்கு சென்று விசாரித்தேன், அவர்கள் சொன்னார்கள், இந்தியாவிலேயே அதிக தொழுநோய் பாதிப்பு உள்ளவர்கள் இங்கு தான் இருக்கிறார்கள் என்று. இங்கு ஆராய்ச்சி மையம் எல்லாம் இருக்கிறது என்று சொன்னார்கள். இன்று தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தொழுநோய் இல்லா தமிழ்நாடு எனும் இலக்கை அடைவதற்கு இந்த துறையின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையும் தொழுநோய் இல்லா இந்தியா எனும் இலக்கை அடைவதற்கு பல்வேறு வகையிலான நடவடிக்கைகளை, ஆராய்ச்சிகளை, கூட்டு நடவடிக்கைகளை விழிப்புணர்வு நிகழ்வுகளை தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறது.

தொழுநோயாளிகள் பாதிப்பு விவரங்கள்

இந்தியா முழுவதும் 10,000 மக்கள் தொகையில் 0.6 % பேர் தொழுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதுவே தமிழ்நாட்டை பொறுத்தவரை 0.3% பேர் தொழுநோயினால் பாதிக்கப்பட்டு இருந்ததை தற்போது 0.27% பேராக குறைக்கப்பட்டுள்ளது. இந்திய முழுவதும் குழந்தை தொழு நோயாளிகளின் 5.18% ஆக உள்ளது. இதுவே தமிழகத்தில் 5.79 % ஆக இருந்ததை தற்போது 5.37% ஆக குறைக்கப்பட்டுள்ளது. இந்திய முழுவதும் அங்க குறைபாடு உள்ளவர்கள் 10 இலட்சம் மக்கள் தொகைக்கு 1.6% ஆக உள்ளது. தமிழகத்தல் 0.9% ஆக இருந்தது, தற்போது 0.35% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் செயல் திட்டங்கள்

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் தொழுநோய் பரிசோதனை சிகிச்சை இலவசமாக செய்யப்படுகிறது. தனியார் மருத்துவமனைகள் மற்றும் தோல் சிகிச்சை நிபுணர்கள், தொழுநோய் பாதிப்பு உள்ளவர்களை கண்டறிந்து சுகாதாரத் துறைக்கு தெரியப்படுத்த வேண்டும். இது நோயாளிகளுக்கு சிகிச்சை செலவு இல்லாத நிலைமை ஏற்படுத்தும். உங்கள் பகுதிகளுக்கு வரும் சுகாதாரத்துறை களப்பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கி, ஒரு நபருக்கு ஒரு மாத்திரை (ரிபார்ம்பிசின்) நோய் தடுப்பு திட்டத்தை செயல்படுத்திட ஒத்துழைப்பு தர வேண்டும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் தேசிய நல வாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.இராஜமூர்த்தி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மாமன்ற உறுப்பினர் மோகன்குமார், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொழுநோய்) கூடுதல் இயக்குநர் மரு.வே.தர்மலிங்கம், செல்லம்மாள் மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர்.வி.மலர்விழி, உயரலுவலர்கள் மற்றும் மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் தெற்கு மாவட்டம், கோலியனூர் தெற்கு ஒன்றியம் கொளத்தூர் ஊராட்சி பா.ம.க. அவைத் தலைவர் பாலசுப்பிரமணியன் தலைமையில் பா.ம.க. கிளைச் செயலாளர் சுரேஷ், அ.தி.மு.க. கிளை தலைவர் ராஜாமணி, பா.ம.க. கிளை தலைவர் ஜனமே ஜெயம், பாமக கிளை பொருளாளர் அய்யனார் ஆகியோருடன் ராஜாராம், ராஜா, வீரமணி, ஆனந்த் , வெங்கடேஷ், விஜயகுமார், சரண், ஏழுமலை, அன்புமணி, தமிழரசன், பிரபாகரன், ஞானவேல், ராஜாராம், ஏழுமலை, ஐயப்பன், முருகன், ராஜா ஆகியோர் முதலமைச்சர் அவர்களின் மக்கள் பணியால் ஈர்க்கப்பட்டு வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் அ.சிவா. மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இராஜ.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், தயா.இளந்திரையன், தே.முருகவேல், தேவ கிருஷ்ணன், கலியமூர்த்தி, ஹரி கேசவன், சின்னசாமி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை! சென்னை தென்மேற்கு மாவட்ட அவைத் தலைவர்

மாம்பலம் ஆ.சந்திரசேகர் இல்லத் திருமணம்!

கனிமொழி கருணாநிதி எம்.பி. – அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துகின்றனர்!

சென்னை, ஜன. 31- சென்னை தென்மேற்கு மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் - ச.மாலா ஆகியோரின் மகன்வழி பேரனும் ஆ.ச.இராசேந்திரன் - இரா.இராதிகா ஆகியோரின் புதல்வருமான இரா.இராசராசசோழனுக்கும், சென்னை இராயப்பேட்டை இ.கோபிநாத் - ஜி.யோகலட்சுமி ஆகியோரின் புதல்வி கோ.அனுஅமிர்தாவுக்கும் மணவிழா இன்று (31.1.2025 - வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணியளவில் மயிலாப்பூர் டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் ஏ.வி.எம். இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவை கழக துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.ஏழுமலை, 'நந்தனம்' கி.மதி, மயிலை எஸ்.முரளி, கோ.சு.மணி, எம்.ஆறுமுகம், ராஜா அன்பழகன், மோனிஷா கருணாநிதி ஆகியோர் வரவேற்கின்றனர்.

அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அன்பகம் கலை, பூச்சி முருகன் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பலர் பங்கேற்கின்றனர்.

பேராவூரணி ஒன்றியத்தில்

6 இடங்களில் ஆதிதிராவிடர் குடியிருப்புகள்!

அமைச்சர் கோவி.செழியன் தொடங்கி வைத்தார்!

பேராவூரணி ஜன. 31 - தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் ஆறு ஊராட்சிகளில் மக்களுடன் முதல்வர் திட்டம், ஆதிதிராவிடர் நலக்குழு சார்பாக ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதிகளை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் தொடங்கி வைத்து பல்வேறு நலத்திட்டங்களை வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் ஒட்டக்காடு ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் மற்றும் நடுமனைக்காடு அரசு நிகழ்ச்சி. கல்லூரணிக்காடு ஊராட்சியில் ஆதிதிராவிடர் குடியிருப்பு, திருச்சிற்றம்பலம் ஊராட்சியில், பாரதி நகர் ஆதிதிராவிடர் குடியிருப்பு, செருவாவிடுதி ஊராட்சியில் மேல ஆதிதிராவிடர் குடியிருப்பு, இடையாத்தி ஊராட்சியில் கொடிமரம் ஆதிதிராவிடர் குடியிருப்பு, திருவோணம் ஒன்றியம் வெட்டுவாக்கோட்டை ஊராட்சியில் தட்டாங்கொல்லை ஆதிதிராவிடர் குடியிருப்பு ஆகிய 6 இடங்களில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் நேற்று முன்தினம் (29.01.2025) தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் தலைமை வசித்தார். பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கா.அண்ணாதுரை , பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் அசோக்குமார் என். மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கோவி.செழியன் பேசியதாவது.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் மூன்றாம் கட்டமாக ஆதிதிராவிடர் நலக் குழு சார்பில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 6 ஊராட்சிகளில் நடைபெறுகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். புதுமை பெண் திட்டம். தமிழ்ப் புதல்வன் திட்டம். விடியல் பயணம். காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் மக்களை தேடி மக்களது குறைகளை களைய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் பொதுமக்கள் இத்திட்டங்களை பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் . மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம். , தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) சங்க மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர்கள் கலந்து கொண்டனர்.

56வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு

புதுக்கோட்டையில் அமைதி ஊர்வலம் - அண்ணாசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை, ஜன. 31 - புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சி தந்த காவியத் தலைவர். உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்க்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

வருகின்ற 3.2. 2025 திங்கள்கிழமை காலை 9 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் , ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

அண்ணா அறிவாலயம் தொண்டரணி !

கே.நித்தியானந்தம் பாட்டி ஆண்டாள் அம்மாள் மறைவு !

கழகத்தினர் அஞ்சலி !

சென்னை ஜன:31 அண்ணா அறிவாலயம் தொண்டர் அணி கே. நித்தியானந்தம் அவர்களின் பாட்டியும், மயிலை கழக முன்னோடி மறைந்த சி.டி.கிருஷ்ணன் அவர்களின் மனைவியும், சி.டி.கே.குமார், சி.டி.கே.அசோகன், சி.டி.கே.செல்வம் ஆகியோரின் தாயாருமான கே. ஆண்டாள் அம்மாள் அவர்கள் நேற்று 30.1.2025 வியாழக்கிழமை மாலை 6 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று 31.1.2025 வெள்ளிக்கிழமை மாலை 4:30 மணிக்கு மேல் 153 சி.பிளாக் ஏகாம்பரம் பிள்ளை தெருவில் இருந்து புறப்பட்டு மயிலாப்பூர் ஈடு காட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

இராயபுரம் 52வது வட்டத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா பூங்காவில் கட்டுமான பணிகளை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார். உடன் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், வட்ட செயலாளர் பி.கண்ணன், சென்னை மாநகராட்சி அதிகாரி பிரபு தாஸ், நவீன் ஆகியோர் உள்ளனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் வரும் 06.02.2025 - வியாழன் மாலை 4:00 மணிக்கு, ஆர்.எம்.கெஸ்ட் அவுஸ், காக்களூரில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெறுகிறது.

மேலும் இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினரும், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணாசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாநில மாணவர் அணிஇணைச்செயலாளர்சி.ஜெரால்டு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபால், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்டபொருளாளர்பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் க.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனா சுதாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் குறித்து.

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்
செயலாளர்
திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி ஆகியோர் புதிய மின்னணு ரேஷன் கார்டுகளை பயனாளிகளுக்கு வழங்கினர். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் கூட்டுறவு உணவு நுகர்வோர் பாதுகாப்புத்துறை மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இயக்குனர் த.மோகன், நுகர் பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் ஆ அண்ணாதுரை, கலெக்டர் மீ.தங்கவேல், எம்.பி., செ.ஜோதிமணி, எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், ஆர் .இளங்கோ, க. சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன் அருகில் உள்ளனர்.